The Hon. Sri M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that when I was in Tiruchirappallli, I heard a significant comment that perhaps for the sins of men God has chosen to go through this " Prayaschit ".

Mr. SPEAKER : God did not say that.

(Many hon. Members stood up in their places.)

Mr. SPEAKER : Now I will first call the hon. Members who have given notice of the question and then the other hon. Members.

Sri A. A. RASHEED : May I know whether the Police are investigating into the cause of the fire and what is the cost of the diamond burnt during the fire?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Precious diamonds, two or three of them, should have been burnt, and that may not cost much. It may be on the whole about one thousand or two thousand rupees. About investigations, it is difficult to investigate the cause of the fire. But still investigation is being done.

Sri T. SAMPATH : May I know when the renovation will be completed ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I have said in the answer that the renovation work has already been started and it is expected that the work will be over in about three months.

Sri T. S. RAMASWAMY PILLAI : May I know whether action has been taken against some temple servants so far and the reasons therefor ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I have no information about it. I have just seen a report in the press to which probably the hon. Member refers.

Sri T. T. DANIEL : May I know, Sir, whether it is a fact that the damage caused is to the extent of Rs. 3,000, and may I also know whether the temple authorities and the Police authorities rushed to the spot immediately as soon as they got the information.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Yes, Sir. The temple authorities, the District Collector, all of them rushed immediately and lost no time in going to the spot. They were all there and did their best apart from the general public who also responded and did their very best. I have no estimate about the actual loss or damage due to fire although I have seen a report in the press that it would be about Rs. 3,000.

Sri S. PAKKIRISAMI PILLAI : இந்தத் தீயினால் உயர்ந்த மதிப்புள்ள வைரங்கள் காணவில்லை என்று பேசிக்கொள்ளுகிறார்கள். அவைகளைத் திருடிக்கொண்டு போவதற்காகத்தான் இந்த விதமான

26th March 1959]

அலங்கோலங்களை அங்கே செய்திருக்கிறார்கள் என்ற சந்தேகம் இருப்பதால் உடனடியாக தகுந்த ஆட்களை வைத்து அதைப் பரிசீலனை செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே சொன்னேன். இல்லாது காணாமற்போன பொருள்கள் ஒன்று இரண்டுதான் என்று அங்குள்ள செக் ரிஜிஸ்டரைப் பார்த்ததில் தெரிகிறது. திருடுவதென்றால் இன்னும் அதிக மதிப்புள்ள ஆபரணங்கள் இருக்கின்றன. மேலும் வைரங்கள் நெருப்பிலே எரிந்துவிடும் என்பதில் சந்தேகம் இல்லை.

SRI K. ANBAZHAGAN: : இப்பொழுது எற்பட்ட விபத்தை ஒட்டி இது வெளியார் தூண்டுதலாகவோ அல்லது அரசியல் கட்சிகளின் தூண்டுதலாகவோ இருக்கும் என்று ஆளும் கட்சியினரைச் சேர்ந்தவர்களால் பேசப்படுவதனால் இந்த மாதிரி சந்தேகத்திற்கு இதில் இடம் இருக்கிறதா என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ? இத்தகைய தூண்டுதல் இல்லையென்றால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இம்மாதிரி பேசுவதை தடை செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும் மற்றவர்களும் இம்மாதிரி பேசுவதாகத் தெரியவில்லை. மேல் சட்டசபை கூட்டத்தில் எதிர்க்கட்சி அங்கத்தினர்களுள் ஒருவர் இவ்விதம் கேட்டதற்கு நான் அம்மாதிரி ஒன்றுமில்லை என்று மறுத்தேன். இந்த மாதிரி சந்தேகிக்க வேண்டிய ஆதாரம் இல்லை. யாரும் இம்மாதிரி நினைக்க வேண்டாம். அம்மாதிரி நினைப்பது தவறு.

SRI S. NAGARAJA MONIGAR : Is it a fact that some of the archakas have been suspended so soon and if so, has it been done on suspicion? The Hon. Minister said that it is difficult to investigate into the cause of the accident. May I know what he means by saying " difficult "?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 'Difficult' is 'difficult'. I can't explain the word further to the hon. Member (Laughter). About certain action referred to have been taken against some temple servants, I have also been a report in the press this morning. I have no other information about it.

SRI A. A. RASHEED : In view of the fact that this 'Sambrani Thailakappu' is highly combustible, will the Government stop the application of this to the idol ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, no doubt, the 'Sambrani Thailakappu' which was smeared over the deity must have contributed to the intensity of the fire, but I must also tell the hon. Member that it is on account of the coating of the 'Thailakappu' that the main deity is kept intact, in spite of the huge fire.

SRI T. T. DANIEL : May I know, Sir, what precautionary steps the Government have taken after the incident for the prevention of such accidents in future?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : All that has to be considered after the renovation is done and after all the investigation is over.

[26th March 1959

Sri P. G. MANICKAM : இந்தத் தீ விபத்து எப்படி ஏற்பட்டது என்று சர்க்காருக்குத் தகவல் கிடைத்திருக்கிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இல்லை என்றுதான் சொல்லியிருக்கிறேன்.

Levy of sales tax on perishables

S. N. Q. 19—Sri T. S. RAMASWAMY PILLAI, Sri A. A. RASHEED and Sri M. D. RAMASAMI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரில் காய்கறி வியாபாரிகளும், கெட்டுப்போகக்கூடிய இதர பொருள்களில் வியாபாரம் செய்பவர்களும் இம்மாதம் 25-ம் தேதி முதற்கொண்டு வேலை நிறுத்தம் செய்யப்போவது சம்பந்தமாக அரசாங்கத்தாருக்கு தகவல் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) அப்படியானால் :—

(i) அந்த வேலை நிறுத்தத்தைத் தடுக்கவும் ;

(ii) இந்த அத்தியாவசியமான பொருள்களை பொது மக்களுக்கு சப்ளை செய்ய வேறு ஏற்பாடுகளை செய்யவும் ;

அரசாங்கத்தார் என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டுள்ளார்கள் ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) (i) Government have fully explained to the dealers that no hardship will be caused to small dealers and vendors.

(ii) Government propose to procure these articles and sell them through suitable agencies, if necessary.

Sri A. A. RASHEED : Will the Government consider the desirability of raising the taxable turnover limit to Rs. 50,000 on perishable goods or at least reduce the tax by half a per cent?

The Hon. Sri R. VENKATARAMAN : It is a matter in which the House has taken a decision only very very recently. I do not think that any circumstances exist for revising the decision.

Sri S. PAKKIRISAMI PILLAI : இந்த வரி விதிப்பு விஷயத்திலே கணக்கு வைக்கும்படியான நிர்ப்பந்தம் அங்கே இருப்பதால் சில வியாபாரிகள் கணக்கு வைக்க முடியாமல்—அவர்கள் கணக்கு எழுதுவதற்கு அவர்கள் வியாபாரம் இடம் கொடுக்காமல் இருக்கிற காரணத்தால்—ஏதாவது ஒரு மொத்தத் தொகையை லைசென்ஸ் பீசாக—அல்லது வேறு வழியிலே—வாங்கிக்கொண்டு கணக்கு வைக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லாமல் செய்ய அரசாங்கம் ஏதாவது யோசனை செய்து இருக்கிறதா ? இம்மாதிரி திட்டம் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : இந்த விஷயம் ஒரு வருஷமாகப் பரிசீலனை செய்து ஆலோசனைக் கமிட்டியில் பல நாட்கள் விவாதிக்கப்பட்டன. இதில் சர்க்காரும் இதர கட்சிக்காரர்கள் எல்லோருமே சேர்ந்து நினைத்தது என்னவென்றால் சிறு வியாபாரிகளுக்கு நாம் அனுகூலம் செய்யவேண்டும், அவர்களுக்கு இருக்கிற தொல்லை தொந்தரவுகளை நீக்கவேண்டும் என்பதுதான். யாரும் பெரிய வியாபாரிக்கும், மொத்த வியாபாரிக்கும் சலுகை கொடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. இதை ஒட்டி தீர்மானமும் எடுக்கப்பட்டது. 30 ஆயிரம் ரூபாய் வரை வியாபாரம் செய்யக்கூடியவர்கள் சிறு வியாபாரிகள் என்றும் அவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்கவேண்டுமென்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

26th March 1959]

30 ஆயிரத்திற்கு மேல் அதிகமாக வியாபாரம் செய்யக்கூடியவர்கள் இன்கம்டாக்ஸ் அஸெஸீயாகத்தான் இருப்பார்கள். 10 சத வீதம் கூட லாபம் வைக்காமல் யாரும் எந்தத் தொழிலிலும் ஈடுபடுவதில்லை. இன்கம்டாக்ஸ் அதாரிடிக்கு கணக்குக் கொடுப்பவர்கள் மாத்திரம் சேல்ஸ் டாக்ஸ் அதாரிடிக்கு கணக்குக் கொடுத்தால் போதும் என்று சர்க்கார் எக்சிகூடிவ் இன்ஸ்ட்ரெக்ஷன் கொடுப்பதாக இந்தச் சபையிலும் மேல் சபையிலும் சொல்லியிருக்கிறார்கள். இதில் சிறு வியாபாரிகள் கூடை வியாபாரிகள் என்று சொல்லுகிறவர்களுக்கு எந்த விதமான தொந்தரவும் கிடையாது. ரிஜிஸ்டர் செய்வது பற்றி ஒரு அறிக்கை வெளியிட்டது. அதாவது 30 ஆயிரம் ரூபாய்க்கு எக்ஸெம்ஷன் கொடுக்கிற காரணத்தால் 25 ஆயிரம் ரூபாய் டர்ன்ஓவர் இருந்தால் அவர்கள் மட்டும் ரிஜிஸ்டர் செய்துக் கொண்டால் போதும். இது இப்போது யோசிக்கப்படவில்லை. முன்பே யோசனையில் இருக்கிறது. இன்னும் இரண்டொரு பண்டங்களுக்கும் சலுகைகள் கொடுக்கவேண்டுமென்பது சர்க்காரின் யோசனையில் இருக்கிறது. எல்லாவற்றையும் ஏப்ரல் 1-ந் தேதி வெளியிடுவதாக சர்க்கார் சொல்லியிருக்கிறது. ஆகவே இது மொத்த வியாபாரிகள் "நாம் வரி விதிப்பதிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும்" என்பதற்காகச் செய்கிற ஒரு பெரிய ஆர்பாட்டம் என்று நான் நினைக்கிறேன். இதற்கு சட்டசபை அங்கத்தினர்கள் எந்தவிதமான ஆதரவும் கொடுக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI K. B. S. MANI : இந்தப் பொருள்களை வருடத்தில் 30,000 ரூபாய்க்குக் குறையாமல் வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு இந்த வரி விதிக்கப்பட்டிருந்தாலும் இந்தப் பொருள்களை வியாபாரம் செய்பவர்கள் பெரும்பாலும் சிறு வியாபாரிகளாகவே இருப்பதால் சிறு வியாபாரிகளே வரியைக் கட்ட வேண்டியிருக்கிறது என்ற வதந்தியை இவர்கள் உண்டாக்கி கடையடைப்பு நடத்தி வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இந்தக் கடையடைப்பின் விளைவாக ஜெயில்கள், ஓட்டல்கள், ஆஸ்பத்திரிகள் போன்ற நிர்வாகப் பொறுப்புள்ள ஸ்தாபனங்கள் ஆகியவைகளுக்கு காய்கறிகள் பழங்கள் ஆகியவை கிடைப்பதில் ஏற்பட்டுள்ள கஷ்டத்தை நீக்க சர்க்கார் முயற்சிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நான் நன்றாக விளக்கமாகச் சொல்லிவிட்டேன். இந்த வரி விதிப்பினால் சிறு வியாபாரிகளுக்கு எந்த விதமான தொல்லையும் கிடையாது. கடையடைப்பினால் ஒரு பக்கத்தில் விவசாயிகளும் காய்கறிகளை உற்பத்தி செய்பவர்களும் மற்றொரு பக்கத்தில் அப்பொருள்களை உட்கொள்ளும் பொதுமக்களும் தான் பாதிக்கப்படுகிறார்கள். வியாபாரிகள் விதண்டாவாதமாக இந்த இரு பிரிவினருக்கும் கஷ்டத்தைக் கொடுப்பது நியாயமல்ல. மொத்த வியாபாரம் செய்பவர்கள், சர்க்காருக்கும், பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் தொல்லை கொடுக்க வேண்டுமென்றநோக்கத்துடன் கடையடைப்புச் செய்கிறார்கள். ஆகையால் இந்தக் கடையடைப்பு நடவடிக்கைகளின் விளைவுகளைத் தவிர்க்க சர்க்கார் முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னேன். கடையடைப்பு நீடித்து நடக்குமானால் இதர ஜில்லாக்களிலிருந்து காய்கறிகள் முதலியவற்றை வரவழைத்து அவைகளை சென்னையில் வினியோகிக்கலாம் என்று சர்க்கார், எண்ணி அதற்கான ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறது. இது சம்பந்தமாக இன்னொரு முக்கியமான விஷயம் சொல்ல விரும்புகிறேன். ப்பால் இதர சரக்குகள் ஆகியவைகள் வியாபாரத்திற்கு இப்போது கூட்டுறவுப் பண்டகசாலைகள் இருப்பதுபோல் காய்கறிகள் வியாபாரத்திற்கும் கூட்டுறவுப் பண்டகச்சாலைகள் அத்தியாவசியம என்பது இவர்கள் செய்யும் ஆர்பாட்டங்களாலும், கிளர்ச்சிகளாலும் தெளிவாக்கப்படுகிறது என்று நினைக்கிறேன்.

SRI K. ANBAZHAGAN : வாணிபத் துறையில் வியாபாரிகளுக்கு 10 சத விகிதம் லாபம் வருகிறது என்று கனம் அமைச்சர் சொல்லும் கணக்கு சரியாக இருந்தாலும், இந்தப் பொருள்கள் அடிக்கடி அழுகிப் போவதால் அவர்களுக்கு அவ்வளவு லாபம் வருவதில்லை. மேலும் அவர்கள் வியாபாரம் செய்வதில் பல சிக்கல்களும் தொல்லைகளும் இருக்கின்றன.

மீண்டும் ஏதாவது ஆலோசனை செய்யப்பட்டு எந்தெந்த பொருள்களுக்கு விதிவிலக்கு கொடுக்கவேண்டுமென்ற முடிவிற்கு அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஆலோசனைக் கமிட்டியில் நடந்த விவரங்கள் கனம் அங்கத்தினருக்கு நேரடியாகத் தெரியும். அதனால் புதிதாக நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை. எந்தெந்த பொருள்களுக்கு விதிவிலக்கு கொடுக்கவேண்டும் என்பது ஏப்ரல் 1-ம் தேதி பிரசுரிக்கப் போகிற எக்ஸ்செம்ஷன் லிஸ்டில் வெளியாகும்.

Sri Arapleeswarar temple at Kollimalai

* 998 *Q.*—SRI M. R. KANDASWAMI MUDALIYAR : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சேலம் ஜில்லா, கொல்லிமலையில் இருக்கும் அரப்பளீஸ்வரர் ஆலயத்தில் யாத்ரீகர் தங்குவதற்கு ஏதேனும் இடவசதி செய்து தர ஏற்பாடு செய்ய உத்தேசமுண்டா ?

(ஆ) அந்த ஆலயத்தின் வருமானம் எந்த முறையில் வசூல் செய்கிறார்கள் ? எந்த முறையில் செலவு செய்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) The income of the temple is derived from about 25 acres of land and from kanikkai realized during Adi Festival and is utilized for the maintenance of the temple.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : இந்த அரப்பளீஸ்வரர் ஆலயமானது, பாடல் பெற்ற, புகழ்பெற்ற ஒரு ஸ்தலமாகும். அங்கு மாசி மாதம் சிவராத்திரிக்கு ஆயிரக்கணக்கான யாத்திரீகர்கள் வெளியிலிருந்து வருகிறார்கள். அங்கு மலேரியா இருப்பதாலும் அவர்களுக்கு மேலேயிருந்து கீழே வந்து போக ரோடு வசதியோ, வாகன வசதியோ இல்லாதிருப்பதாலும், அங்கேயே யாத்திரீகர்கள் தங்குவதற்கு இடவசதி செய்து கொடுக்க அமைச்சர் அவர்கள் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உற்சவ காலங்களில் தற்காலிகமாக பந்தல்கள், கொட்டகைகள் போடப்படுகிறது. அங்கு நிரந்தரமாக கட்டிடங்கள் கட்ட நிதி வசதி இல்லை.

Salt factories

* 999 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of places where Salt Factories are working on Co-operative basis; and

(*b*) the aid they get from the Co-operative department?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Salt Co-operative Societies are working at eight places in this State.

(*b*) They are given such aid as are necessary by way of services of departmental officers, loans, assignment of lands, etc., on the merits of each case.